# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201307
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப (ஓ).
*************

முறையீட்டு மனு எண் : 0285 / 2017 / பேரூ-2

ஆணை எண் :114/2017

நாள் : 12/5/2017

திரு.எம்.மீனாட்சி சுந்தரம்,
பேரூராட்சி செயல் அலுவலர் (ஓய்வு), — முறையீட்டு மனுதாரர்
7-B1, ராஜகோபாலபுரம்,
வேடசந்தூர் - 624 710.
திண்டுக்கல் மாவட்டம்.

1. செயலாளர், நகராட்சி (ம) குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை-9.

2. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம்,
   சென்னை-108.

3. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திண்டுக்கல் மாவட்டம்.

4. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திண்டுக்கல் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியரகம்,
   திண்டுக்கல். - எதிர் மனுதாரர்கள்

# ஆணை

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு.எம்.மீனாட்சி சுந்தரம், பேரூராட்சி செயல் அலுவலர் (ஓய்வு) அவர்கள் திரு.கே.போஜன், செயல் அலுவலர், ஸ்பெஷல் கிரேடு அவர்களின் ஊதியத்திற்கு சமமாக ஊதியம் நிர்ணயம் செய்யக் கோரி அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 பேரூராட்சிகளின் இயக்குநர், மாவட்ட ஆட்சியர், மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஆகியோரை எதிர் மனுதாரர்களாக குறிப்பிட்டு 01.03.2017 நாளிட்ட மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார்.

2.மேற்படி மனு விதிகளின்படி உரிய படிவத்தில் ரூபாய் 10/-க்கான நீதி மன்ற கட்டண வில்லையுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி எதிர்மனுதாரர்கள், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சட்டம், பிரிவு 2 கூறு (11) ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள "பொதுப்பணியாளர்" என்ற வரையறைக்குள் உட்பட்டவர்கள் அல்ல. எனவே, இம்முறையீட்டு மனு இம்முறைமன்ற விசாரணைக்கு உகந்தது அல்ல எனக் கருதி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் **என்னால் கையொப்பமிடப்பட்டு**, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்
திரு. எம். மீனாட்சி சுந்தரம்,
**த/பெ.எஸ்.முத்துபிள்ளை,**
பேரூராட்சி செயல் அலுவலர் (ஓய்வு),
7-B1, ராஜகோபாலபுரம், அத்துமேடு,
வேடசந்தூர் - 624 710.
திண்டுக்கல் மாவட்டம்.

இணைப்பு:அசல் மனு.